# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU

## MCOP No. 20/2023

| | |
|---|---|
| Ranking of Witness | **PW.1** |
| Name | திரு.சின்னதம்பி |
| Father's Name/Husband Name | திரு.ராஜா |
| Age | 32 |
| Address | தர்மபுரி மாவட்டம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.10.2025.
(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

ஒரு நாள் காலதாமதமாக புகார் அளித்தேன் என்றால் சரிதான். நான் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கான வாகன பதிவு சான்றிதழ், காப்புறுதி சான்றிதழ், எனது ஓட்டுனர் உரிமம் ஆகியவற்றை வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் விபத்து ஏற்பட்டவுடன் சிகிச்சை எடுத்துக் கொண்ட மருத்துவமனையின் விபத்து பதிவேட்டினை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் உள்நோயாளியாகவோ வெளிநோயாளியாகவோ சிகிச்சை பெற்றேன் என்பதை காண்பிக்கும் வகையிலான மருத்துவ ஆவணங்கள் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ.2 ஆவணத்தில் ஒரு மருந்துச் சீட்டு நகல் என்றால் சரிதான். மற்றொரு மருந்து வாங்கிய ரசீதானது எதற்காக வாங்கப்பட்ட மருந்து என்பதை காண்பிக்கும் வகையிலான மருத்துவரின் மருந்துச் சீட்டினை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு என்ன காயம் ஏற்பட்டது அதனால் எந்தவிதமான பாதிப்புகள் ஏற்பட்டது என்பதை காண்பிக்கும் வகையிலான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால்

22/10/25

22/10/2025

சரிதான். எனக்கு வேலை இழப்பும் வருமான இழப்பும் ஏற்பட்டது என்பதை காண்பிக்கும் வகையிலான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தான் விபத்திற்கு காரணம் என போலிசார் தீர்மானித்தார்கள் என்பதை காண்பிக்க முதல் தகவல் அறிக்கையை தவிர வேறு எந்த ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது இருசக்கர வாகனத்தையும் 1ம் எதிர் மனுதாரரின் இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினார்கள் என்றால் சரிதான். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலிசார் தயார் செய்த வரைபடம் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்தில் எந்தக் காயமும் ஏற்படவில்லை என்றும், நான் எந்த சிகிச்சையும் எடுத்துக் கொள்ளவில்லை என்றும் அதனால் எனக்கு எந்தவிதமான இழப்பீடும் வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து எனது தவறினால் ஏற்பட்டது என்றும் அதனால் எனக்கு இழப்பீடு வழங்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. எதை அடிப்படையாக கொண்டு 1ம் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து விபத்து ஏற்படுத்தினார் என்று கூறுகிறேன் என்றால் அதுபற்றி சரியாக தெரியாது. விபத்து கோரிக்கை மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

22/10/2025

<u>**மறுவிசாரணை – இல்லை**</u>

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 22.10.2025 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

22/10/25

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.